பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு - 01
2020.07.01

சேரல்: முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்/ பொது முகாமையாளர்: சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

கனம் ஐயா/ அம்மணி

## சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி

இது, சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதிக்கு நிதியிடுவதனை வசதிப்படுத்துவதற்காக நாணய விதிச் சட்டத்தின் 83(1) ஆவது பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளுக்கிணங்க, வர்த்தக வங்கிகளுக்கு முற்பணங்களை வழங்குவது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2020.06.19 ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்-கொவிட்19/2020/04 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானதாகும்.

2. நாணய விதிச் சட்டத்தின் 83(1)(இ) பிரிவின் கீழ், சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வாக்குறுதிச் சான்றிதழ்களுக்குப் பிணையாகப் பின்வரும் உத்தரவாதங்களைப் பிணையாக வைக்க உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதிப்பதற்கு நாணயச் சபை ஒப்புதல் வழங்கியிருக்கின்றது

   (i) அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள்);

   (ii) தங்கம் மற்றும் தங்கக் கட்டிகள்; அத்துடன்

   (iii) தொடர்பான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அடகுபிடித்தல் சொத்துப்பட்டியல் உட்பட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கட்டம் 1 ஆக வகைப்படுத்தப்பட்ட பெறத்தக்க செயலாற்றக் கடன்கள்.

   தொடர்பான கடன் உடன்படிக்கை, உத்தரவாத உடன்படிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் என்பன பங்கேற்கும் வங்கிகளுக்கு காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

3. நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான அவசர தேவை மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட கோரிக்கைகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு, தகைமை மற்றும் துணைக் கடன்பாட்டாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய கடன் தொகைக்கான ஒப்புதல் என்பனவற்றிற்கான பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் உறுதிப்படுத்தல் கிடைத்ததும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு முன்னரே கூட மேற்குறிப்பிட்ட வசதியின் கீழ் 4 சதவீத வட்டியில் கடன்களைப் பகிர்ந்தளிக்கலாம்.

இக்கடிதத்தின் உள்ளடக்கத்தினை தங்களின் தொடர்பான திணைக்களங்கள்/ கிளைகளிலுள்ள அலுவலர்களின் கவனத்திற்குத் தயவுசெய்து கொண்டு வரவும்.

உங்கள் உண்மையுள்ள

**எம்.எஸ்.கே தர்மவர்தன**
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**